Cover page

# கொள்கை விளக்க அறிவிப்பு

## மாற்றுத்திறனாளி குடிமகன்களால் மாற்றுத்திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்டது

## நாங்கள் >1,00,00,000 வாக்காளர்கள்

## நாங்கள் இல்லாமல் எங்களைப் பற்றி ஒன்றும் இல்லை

Back side cover

**தொலைநோக்கு**

நேஷனல் டிசிபிலிட்டி நெட்வொர்க்.( National Disability Net Work –NDN)

நேஷனல் கமிட்டி ஆன் ரைட் ஆஃப் டிசபிலிட்டிஸ் (National Committee on Rights of Persons with Disabilities NCRPD)

**ஆசிரியர் குழு**

அர்மான்அலி
ராஜிவ் ராஜன்
ராமா சாரி
ஸ்மிதா சதாசிவன்
ஸ்மித் பரிக்ஷித்
அக்ஷய் ஜைன்
வாமிகா குப்தா
**உதவி**

National Centre for Promotion of Employment for Disabled People (NCPEDP)

**பொறுப்பு துறப்பு**

இந்த கொள்கை விளக்க அறிவிப்பு கையேடு மாற்றுத்திறனாளி குடிமகன்களுக்காக மாற்றுத்திறனாளிகளால் உருவாக்கப்பட்டது. வரும் 2024 தேர்தலை முன்னிட்டு உருவாக்கப்பட்டது.

இந்தகையேடுஉபயோகப்படுத்துபவர்கள்இதைமற்ற வகையான பரிந்துரைக்கோ,சட்டஉதவிக்கு உபயோகப்படுத்தக் கூடாது . இதில் உள்ள தகவல்கள் அதன் உண்மை தன்மையை நன்றாக பரிசீலிக்கப்பட்ட பின் எழுதினாலும், இதன் ஆசிரியர் அல்லது வெளியீட்டாலர் இதில் தவறு இருந்தாலோ அல்லது விடுபட்டாலோ இதற்கு பொறுப்பு ஏற்க மாட்டார்கள் .

**அறிமுக உரை**

இந்திய மக்கள் தொகையில் மாற்றுத்திறனாளி குடிமகன்கள்2.21% அதாவது 26.8 மில்லியன் மக்களாக 2011ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் உள்ளார்கள். ஒரு கோடிக்கு மேல் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தவர்களாக வாக்காளர்களாக உள்ளார்கள். பொதுத் தேர்தல் 2024 மாற்றுத்திறனாளிகளின் குரல்களும் பொது விவாதத்தில் கேட்கப்பட வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட சதவீத வாக்காளர் வங்கியை உடையவர்கள் மட்டுமல்லாமல் பொருட்களை வாங்குவதிலும் அதிக எண்ணிக்கை உள்ள வாடிக்கையாளர்களும் ஆவார்கள். இதனால் இந்தியாவின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறார்கள். மாற்றுத்திறனாளி குடிமக்கள்கள் எல்லா அரசியல் கட்சிகளிடமும் தாங்களும் வளர்ச்சியின் ஒரு அங்கமாக இருப்பதை வலியுறுத்தி வருகிறார்கள். கீழ்வரும் விவரங்கள் 2024 தேர்தலில் எல்லாஅரசியல்கட்சிகளிலும் முக்கிய கொள்கை அறிவிப்பாக இருக்க வேண்டும்.

இந்தியா உலகிலேயே மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையில் மாற்றுத்திறனாளிகளை கொண்டுள்ளது. இதனால் மாற்றுத்திறனாளிகளை சமூகத்தில் ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது . ஐக்கிய நாடுகள் சபையில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் குறித்த கொள்கையில் நாம் தான் முதலில் கையெழுத்திட்டோம் . நமது சட்டமும் உறுதியாக உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நல உரிமை சட்டம் 2017ல் அமலுக்கு வந்தது முதல் எளிதான அணுகுமுறை, உள்ளடங்கிய கல்வி, மற்றும் வேலை வாய்ப்பு, புனர்வாழ்வு, மதிப்பீடுகள், குறிப்பிட்ட ஆதரவுகள், ஒதுக்கி வைக்காமல் சம வாய்ப்பு கொள்கை முதலியவற்றை அடக்கியுள்ளது . பல்வேறு அமைச்சகங்கள் மத்திய மற்றும் மாநில அரசாங்கத்தில் ஒருங்கிணைந்து அனுகத் தகுந்த கட்டமைப்பை அனுக கூடிய இந்தியா கட்டமைப்பிலும் தேசிய கல்விக் கொள்கையிலும் இணைந்து பணியாற்றுகின்றன. ஒரு கோடிக்கு மேல் எண்ணிக்கையில் உள்ள வாக்காளர்களான நமக்கு தேவைஉறுதியான செயல்பாடுகள்.

**நிதி ஒதுக்கீடு (பட்ஜெட் )**

சமீப வருடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல் அமைச்சகம் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 0.02% மட்டுமே பெற்றுள்ளது. அர்ப்பணிக்கப்பட்ட திட்டமான பாதிப்புக்கு உள்ளாகும் மலைவாழ் குழுக்களுக்கு 24 ஆயிரம் கோடி அவசியம் தேவை. ஆனால் இதன் மொத்த துறைக்கும் ஒதுக்கப்பட்ட அளவு மிக மிக குறைந்தது. ஒவ்வொரு அமைச்சகமும் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளடக்கி கொள்முதலும் அதன் நிதி ஒதுக்கீட்டையும் அவர்களுடைய ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அணுகு தளம் மற்றும் சமூகத்தில் உள்ளடக்கிய திட்டங்கள் ஒவ்வொரு அமைச்சகத்திலும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இதனால் நாம் அனைத்து கட்சியினரும் பின்வருபவற்றை முன்மொழிய வேண்டும் .

- மாற்றுதிறனாளிகளுக்கான சமூக உள்ளடக்கத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கான நிதிஒதுக்கீடு ஸ்டேட்மென்ட் உதாரணமாக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நிதிஒதுக்கீடு 5% இருக்கவேண்டும். அடுத்த ஐந்து வருடங்களில் இந்த நிதி ஒதுக்கீடு 50,000 கோடியாகவும்அதாவது ஒவ்வொருவருடமும் 10,000 கோடிரூபாய் சேர்க்கப்படவேண்டும்.

**உடல்நல காப்பீடு**

உலக சுகாதார மையத்தின் அறிக்கை படி , உடல் நலத்திற்க்காக இந்தியாவில் குடும்பங்கள் கையைவிட்டு செலவு பண்ணுவது 65 சதவீதம் அதிகமாக உள்ளது. இதுவே உலகத்தின் கூட்டு மதிப்பு 3 சதவீதமாக உள்ளது. இந்த எண்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு இதை விட அதிகமாக இருக்கும். ஏனெனில் நாங்கள் வாழ்க்கைக்கு தேவையானவற்றிற்கு கூட அதிகமாக செலவழிக்க வேண்டி உள்ளது. இதனால் உடல்நல காப்பீடு வழங்கும் தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் இந்த சேவையை வழங்க முடியவில்லை . இந்திய காப்பீடு ஒழுங்குமுறை ஆணையம்விலையேற்றம் குறித்த வழிகாட்டுதல்களை அறிவித்த பிறகும், இதில் தகுந்த

முன்னேற்றம் ஏற்படவில்லை . காப்பீட்டு முகவர்களுக்கான பயிற்சியில் இது குறித்த தகவல்கள் இன்றியும், பாகுபாடு காண்பிப்பதும் தொடர்கிறது . மற்றும் தற்பொழுது அரசாங்கம் நடத்தப்படும் ஆயுஷ்மான் பாரத், நிராமையா திட்டத்தை பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லை . எனவே நாம் அரசியல் கட்சியினரிடம் நிர்பந்திப்பது உடல்நல காப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்தி ஆயுஷ்மான் பாரத் மாற்று திறனாளிகளுக்கான காண காப்பீடு திட்டத்தையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

“2029 இல் அனைத்து தனியார் மற்றும் அரசாங்க இன்சூரன்ஸ் கம்பெனிகள் அணுகக்கூடிய மலிவுத் தொகையில் உடல்நல காப்பீட்டு வாசிகள் அனைத்து மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்கியதாகவும் அதற்கு ஒத்து போகும் வகையிலும் உடல்நல இழப்பீட்டை ஈடு செய்யும் வகையிலும் இருக்க வேண்டும். இழப்பீடானது புனர்வாழ்வு, ஆர்த்தோ பிடிக் எனப்படும் இயக்கம், சம்பந்தப்பட்ட மற்றும் மருந்து இல்லாத மருத்துவ செலவுகள் மற்றும் உபகரணங்களுக்கான செலவுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்”.

## முக்கிய கோரிக்கைகள்

1 நிதி ஒதுக்கீடு

மாற்றுத்திறனாளிகளுக்கு 5% நிதி ஒதுக்கீடு நிதி ஒதுக்கப்பட வேண்டும்

2 உடல்நலக் காப்பீடு

மலிவான மற்றும் உடல் நலக் காப்பீட்டு கொள்கைகள் எல்லா மாற்றத்தினாளிகளுக்கும் வேண்டும்.

3 அணுகுமுறை

பொது மற்றும் தனியார் கட்டிடங்களில் பொருட்களில் சேவைகளில் பொதுப் போக்குவரத்தில் அணுகத்தக்க மற்றும் பகிரும் முறைகள் அமைக்கப்பட வேண்டும்.

4 சமூக பாதுகாப்பு

ஒரே தேசம் ஒரே ஓய்வூதியம் திட்டமாக எல்லா மாற்றுத்திறனாளிகளுக்கும் மாதம் 5000 வழங்கப்பட வேண்டும்.

5 சமூக மற்றும் அரசியல் உள்ளடக்கம்

சட்டப் பிரிவு 15 இல் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்து மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்க வேண்டும்.

5% எல்லா ஆட்சித் திறன்களிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

ராஜ்யசபாவில் உறுப்பினராக மாற்றுத்திறனாளிகள் ஜனாதிபதியின் மூலம்.நியமிக்கப்பட வேண்டும்.

6 பொருளாதார பங்கேற்பு

சிறு குறு நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள் வேலை செய்ய அனுகத் தகுந்த முறை இருக்க வேண்டும் .

7 பருவ நிலை மாற்றம்.

தேசிய பருவ நிலை மாற்றம் பற்றிய திட்டத்தில் அதிக பாதிப்புகளுக்கு உள்ளாக கூடிய மாற்றுத்திறனாளிகள் சமூகத்தையும் சேர்க்க வேண்டும் .

8 பாலினம்
டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் படி நவீன தொழில்நுட்பத்தை செயல்முறை படுத்தும் பொழுது இதனை ADIP(ஏடிஐபி)ன் ஒரு துணை திட்டமாகவும் கணினி கல்வியும் மின்மய கல்வியும் மேல்நிலைப்பள்ளிமுடித்த மாற்றுத்திறனாளி பெண்களுக்கு ஸ்மார்ட் போனும் வழங்கப்பட வேண்டும்.

9 விளையாட்டு

தகுந்த மற்றும் உள்ளடக்கிய பாரா கள விளையாட்டு வீரர்களுக்கு அனுகத் தகுந்த மற்றும் உள்ளடக்கிய விளையாடக்கூடிய கட்டமைப்பு நாடு முழுவதும் உருவாக்கப்பட வேண்டும் .

10 கல்வி
2029 தேசிய சராசரி அளவீட்டை அடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளும் கல்வி நிலையங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

## அணுகத் தக்க முறை

இந்தியா முழுவதும் உள்ள அணுகுமுறை பிரச்சாரம் மற்றும் தற்பொழுது இருக்கும் சட்ட வடிவுகள், உதாரணமாக தகவல் மற்றும் தொடர்பு துறை வழிகாட்டுதல்கள் மாற்றுத்திறனாளிகள் நலச் சட்டம் 2016இன் பிரிவு 45 படியும் கட்டடங்கள் டிஜிட்டல் (மின்னியல்) நாடு முழுவதும் அனுகத் தகுந்த முறையில் இருக்க வேண்டும். ஆனால் முழுவதுமாக இல்லை. இதனால் மாற்றுத்திறனாளிகள் சுதந்திரமாக இயங்க இது ஒரு தடையாக உள்ளது. எனவே அரசியல் கட்சியினர் தங்கள் கொள்கையில் கீழ்வருவனவற்றை உறுதி மொழியாக சேர்க்க வேண்டும் .

**“தற்பொழுது இருக்கும் பொது மற்றும் தனியார் கட்டிடங்கள், பொருட்கள், சேவைகள் பொது போக்குவரத்து பிரிவு தகவல் தொடர்பு முதலியவற்றில் கண்டிப்பாக வரும் 3 வருடங்களுக்குள் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் அணுகத் தகுந்த முறை செயல்படுத்தப்படும் என்ற உறுதிமொழி, எல்லா தொழில்களிலும் அணுகத் தகுந்த முறை கண்டிப்பாக அமல்படுத்தப்படும்”.**

**“2026க்குள் செயலி மூலம் எடுக்கப்படும் போக்குவரத்தை நடத்துபவர்கள் அனைவரும் தற்பொழுது உள்ள மோட்டார் வாகன வழிகாட்டுதல் 2020ன் படி மாற்றுத்திறனாளிகளுக்கும் உள்ளடக்கிய வழிகாட்டுதல்கள் சேர்க்கப்பட வேண்டும்”**

**சமூக பாதுகாப்பு**

மாற்றுத் திறனாளிகள் உள்ள குடும்பத்தினருக்கு, அவர்களுக்காகவும் செலவு குடும்பத்தினரின் கூடுதல் செலவாக செலவழிக்கப்படுகிறது இவை 12% த்திலிருந்து 26% உள்ளது. 70% மாற்றத்திறனாளி குழந்தைகள் பள்ளி செல்வதில்லை . மூன்று கோடியில் 34 லட்சம் பேர் மட்டுமே வேலைவாய்ப்புக்கும் சுய தொழிலுக்கான உதவிகளுக்கும் தகுதி பெறுகிறார்கள். மாற்று திறனாளிகள் இதனால் ஆதரவு உதவி கோரி

காத்திருக்கிறார்கள்.  எனவே எல்லா அரசியல் கட்சிகளும் கீழ் வருபவற்றை தங்கள் கொள்கையில் அறிவிக்க வேண்டும்.

“நாங்கள் தேசிய சமூக உதவி திட்டத்தை சமமாக்கி ஒரு தேசம் ஒரே ஓய்வூதியம் ஓய்வூதியம் திட்டத்தின் படி மாதம் 5 ஆயிரம் ரூபாய் மாற்றத்திறனாளிகளுக்கு நேரடியாக கிடைக்கும்படி செய்வோம். தற்பொழுது உள்ள 100 ரூபாயிலிருந்து 3600 வரை பல்வேறு இடங்களில் செயல்படுத்தப்படும் திட்டத்தை மாற்றி.  எல்லா அமைச்சக திட்டங்களிலும்  மாற்றுத்திறனாளிகளையும் சமூக பாதுகாப்பு திட்டங்களான  பி.எம். ஆவாஸ் யோஜனா, MGNREGA போன்றவற்றில் முன்னுரிமை கொடுக்கப்படும்

**சமூக அரசியல் உள்ளடக்கம்**

சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது . நமது பாரம்பரிய பாத்திரங்களான திருதராஷ்டிர, அஷ்டவக்ர, சகுனி ,மந்தாரை போன்ற பெயர்களை குறிப்பிட்டு சமூகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளை குறிப்பிடக் கூடாது . எனவே அனைத்து அரசியல் கட்சியினரும் கீழ்கண்டவற்றை தங்கள் கொள்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

**“இந்திய சட்டம் 15 இல் மாற்றங்களை செய்து மாற்றுத்திறனாளிகளுக்குள் பாகுபாடு இன்றி அவர்களுக்கும் அடிப்படை உரிமை கிடைத்து சமூக உள்ளடக்கத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.”**

**“ 5% ஒதுக்கீடு அமல் படுத்தி அரசியல் உள்ளடக்கமான73, 74 சட்டப்பிரிவில் தகுந்த மாற்றங்கள் செய்வோம் “**

**“சட்ட வடிவு 80 படி ஆட்சிப் பணியில் உள்ளடக்கமாக குறைந்தது ஒரு மாற்றுசத் திறனாளியை  மனு தாக்கல் செய்ய வழி வகுக்கப்படும்” .**

பொருளாதார பங்கேற்பு

இந்தியாவில் மொத்தம் உள்ள மாற்றுத்திறனாளிகளில் பாதி பேராவது வேலை வாய்ப்பிற்கான திறன் பெற்றுள்ளார்கள். ஆனால் ஒரு சதவீதம் மட்டுமே முன்னணியில் உள்ள 50 நிப்டி கம்பெனிகளில் இட ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக 2.21% பொதுத்துறைகளில் உள்ளது . மாற்றுத்திறனாளிகளின் பிரதிநிதித்துவம் 4% குறைவாகவே உள்ளது . இதனால் அவர்களின் திறமை வெளிவருவதில்லை. பொருளாதாரத்திற்கு தனது பங்களிப்பை அளிக்க தடையாக உள்ளது . எனவே எல்லா கட்சியினரும் கீழ்கண்டவற்றை தங்கள் கொள்கையாக அறிவிக்க வேண்டும்.

**“ 2027க்குள் எல்லா அமைச்சகம் மற்றும் துறைகளில் உள்ள பணிகளும் நிரப்பப்பட உறுதி அளிக்கிறோம் அணுகத் தகுந்த வேலை என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு சிறு குறு மற்றும் நடுத்தர பெரிய தொழில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற குறிப்பிட்ட ஆதரவு அளிக்கப்படும்“.**

**“சுயதொழில் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களில் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்கிதொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு திட்ட பயிற்சியளித்து, மாற்றுத் திறனளிகள் உரிமை சட்டம் 2016 இன் படி 4% இட ஒதுக்கீடு அமல்படுத்துவோம்.”**

பருவநிலைமாற்றம்.

பருவநிலைமாற்றத்தால், பலவீனமான மாற்றுத்திறனாளிகள் முதலில் பாதிப்புக்கு உள்ளாவதோடு, அவர்களின் தேவைக்கேற்ற ஆதரவு தடைபடுவதினால், வளர்ச்சி இலக்கை எட்டமுடிவதில்லை. பருவநிலைமாற்றத்தினால் காக்கப்படவேண்டுமெனில், சமநிலைபடுத்துவதும், அதிக பாதிப்பை ஏற்படுத்தாத செயல்படுத்த வேண்டும். எனவே எல்லா அரசியல்கட்சியினரும் கீழ்கண்டவற்றை கொள்கையாக அறிவிக்க வேண்டும்.

**“அதிகம்பாதிப்பிற்குள்ளாகும் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய பருவநிலைமாற்றம் பற்றிய தேசிய திட்டம் (NAPCC) 2008 இன்படி ஒரு குடைபோல் காப்போம். “**

**“மாற்றுத்திறனாளிகள் உரிமைசட்டம் 2016, பிரிவு 8 இன்படி, இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் அந்தமாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பற்றிய புள்ளிவிவரங்களை கட்டாயம் வைத்திருப்பதை உறுதிசெய்யும்”.**

**கல்வி**

மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வியும், உடல்நலமும் மதிப்பான வாழ்க்கை வாழ உறுதிசெய்யும். சமூகத்துடன் உள்ளடக்கம் இல்லாததால் ஓரங்கட்டப்படுகிறார்கள். இதுபற்றிய கொள்கையும், திட்டங்களை செயல்படுத்துதலும் அவசியம் தேவை.
எனவே எல்லா அரசியல்கட்சியினரும் கீழ்கண்டவற்றை கொள்கையாக அறிவிக்க வேண்டும்.

**“நாங்கள் புள்ளி விவர கணக்கெடுத்து எல்லா மாற்றுத்திறனாளி குழந்தைகளும் கல்வி பெற பள்ளி செல்வதை உறுதி செய்து, தேசிய பள்ளி சேர்க்கை இலக்கைஅடையஉறுதிசெய்வோம். இது 2022 இல் 28.4% ஆகஇருந்தது. “**

**விளையாட்டு**

இந்த 2024-25 இல் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட் இதுவரை இல்லாத மிக குறைந்த அளவான 25 கோடிஒதுக்கியுள்ளது. பாராலிம்பிக்கில்நல்லசாதனைபுரிந்துள்ளோம்.
விளையாட்டு என்பது உடல்நலத்திற்கும், சமூக உள்ளடக்கத்திற்க்கும் சிறந்தசாதனம். கூடுதலாக நிதி ஒதுக்கப்படவேண்டும்.

எனவே எல்லா அரசியல்கட்சியினரும் கீழ்கண்டவற்றை கொள்கையாக அறிவிக்க வேண்டும்.

**“சாதாரண தடகள விளையாட்டு வீரர்களுக்கான அங்கீகாரம் போல் பாரா விளையாட்டிலும் விளையாடுபவர்களை அங்கீகரிக்க கொள்கை வகுக்கப்படும். எல்லா விளையாட்டுக்களங்களும் அணுகுவதற்கு ஏற்ற வகையில் உலகளாவிய மாதிரியில் இருக்கும்:.**
**“மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டத்தின்படி இந்தியாவின் ஐந்துமாநிலங்களில் மாற்றுத்திறன்களுக்கான விளையாட்டு தளங்களும் விளையாட்டு வீரர்களை மிகுந்த தரத்தில் உருவாக்கவும் வழிவகை செய்யப்படும்.”**

**பாலினசமத்துவம்**

அதிக மக்கள் தொகை உள்ள உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்கள் மொபைல்போன் உபயோகிப்பதற்கு தடை நிலவுகிறது. குறைந்த மற்றும் மத்திய வருவாய் உள்ள நாடுகளில் மொபைல் போன் உபயோகித்து குறைவதனால் விழிப்புணர்வும் அவர்களுக்கு உள்ள உரிமையும் குறைவாக இருக்கிறது. முக்கிய தடைகளான கல்வி அறிவுதிறன் பாதுகாப்பு மற்றும் செயலாக்கத்தில் இதனால் தடை நிலவுகிறது. இ கவர்னென்ஸ் எனப்படும் மின்னியல் மூலம் செய்யப்படும் வேலைகளுக்கு இது போன்ற சவால்களை தகர்த்து தொழில்நுட்ப “நாரி” ஆக மாற்றவேண்டும். எனவே எல்லா அரசியல்கட்சிகளும் கீழ்கண்டவற்றை தங்களது கொள்கையாக உறுதிசெய்யவேண்டும் .

**“டிஜிட்டல் இந்தியா தரவிற்க்கு ஏற்ப தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நாங்கள் ஏடிஐபியின் துணைதிட்டமாக மின்னியல்மூலம் கல்வியறிவும் ஸ்மார்ட்போனும் மேல்நிலை கல்வி முடித்த மாற்றுத்திறனாளி பெண்களுக்கு ஸ்மார்ட்போன் வழங்கப்படும். “**

**சமபங்கேற்பை உறுதிசெய்து அதற்கேற்ற கொள்கைகள் வகுத்து உடல்நலத்திற்கு ஏற்ற அணுகுமுறை ஆரம்பகல்வி மற்றும் மேல்நிலைக்கல்வியை அளித்தல் மற்றும் மாற்றுத்திறனாளி பெண்களை வன்முறையில் இருந்து பாதுகாப்போம்.”**

Back side cover page